DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.118/2025**
Prosecution Witness P.W.17

Name : **திரு.பரமத்துரை** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

A1 ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது, மற்ற எதிரிகள் ஆஜர்

**நாள்: 18.03.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2024–ம் தேதியன்று நான் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ரதி பிரியா க/பெ. முத்துக்குமரன் என்பவர் காலை 11.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜராகி பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கம்பம் வடக்கு சந்தைக்கு வந்து சதாம் உசேன் என்பவர் சத்தம் போட்டதாக புகார் கொடுத்தார். அந்த புகார் தொடர்பாக நிறைய பொறுப்பு அதிகாரி திரு. எம். அரசன் சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக உத்தமபாளையம் நீதிமன்றத்தில் அவர்கள் கிடையே வழக்கு நடைபெற்று வந்ததன் காரணமாக மனு ரசீது எண். 341/2024 கொடுத்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் விசாரித்து முடிக்கப்பட்டது. அந்த மனு ரசீதை நான் வழங்கினேன்.

2. சார்பு ஆய்வாளர் பார்வைக்கு அந்த மனு ரசீதை நான் வைத்தேன். அந்த மனு ரசீது எண். 341/2024. என்னிடம் காண்பிக்கப்படும் மனு ரசீது தான் என்னால் வழங்கப்பட்டவை அந்த மனு ரசீதுடன் ரதிபிரியா வழங்கிய புகார்

இணைக்கப்பட்டுள்ளது அது அ.த.சா.ஆ.20, ஆய்வாளர் உத்தமபாளையம் அவர்கள் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார் .

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. ஒரு வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்தால் புகார் கொடுத்த அன்றே புகார் ரசீது கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். சந்தையில் சம்பவம் நடந்த காரணத்தினால் முதலிலேயே அவர்களுக்கிடைய பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது என்ற காரணத்தினால் புகார் ரசீது அதன் பிறகு வழங்கப்பட்டது. ஏற்கனவே அவர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்துவிட்டது என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் சொல்வது போல் ஏற்கனவே பேசி முடிக்கப்பட்டு இருந்தால் இது சம்பந்தமாக புகார் ஏற்பு மனு கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இந்த புகார் மனு சம்பந்தமாக எனக்கு நேரடியாக விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். விசாரணை முடித்த பிறகு உதவி ஆய்வாளர் ரசீது கொடுக்குமாறு சொன்னதன் பேரில் நான் ரசீது போட்டேன். சி.எஸ்.ஆர்–ஐ பொறுத்தவரை யார் விசாரணை அதிகாரியாக இருந்தார்களோ அவர்கள்தான் கையெழுத்து போட வேண்டும் என்றும், நான் விசாரணை அதிகாரியாக இருக்க முடியாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

3. மனு ரசீதில் எந்த இடத்தில் வைத்து எவ்வளவு பணம் கேட்டு மிரட்டினார் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போனில் மிரட்டியதாக சொல்லப்பட்டுள்ளது. இந்த விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லி உள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. புகார் ஏற்பு மனு ரசீது வரிசை 4–ல் எதிரியின் அப்பா பெயரோ, முகவரியோ, வார்டோ, குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டாம் எதிரிக்கும் அவரது

முகவரி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நகல் பெற்றுக் கொண்டதாக புகார்தாரர் தெரிவித்து கையெழுத்து போட்ட இடத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுதாரர் கையொப்பமிட்ட இடத்திலும் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. இந்த புகார் ஆனது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 23.10.2024 ஆம் தேதியன்று கொடுக்கப்பட்டது, அன்றைய தினமே சி.எஸ்.ஆர் போட்டு இருக்க வேண்டும் என்றால் நான் அன்றைய தினம் பணியில் இல்லை. இந்த சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 23 ஆம் தேதியன்று மாலையில் நடந்தது. வழக்கிற்காக நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும் சம்பவம் நடந்தது வேறு தேதி என்றும், அந்த தேதியில் சி.எஸ்.ஆர் போட்டு இருப்போம் என்றால் சரியல்ல.

5. உழவர் சந்தை என்பது எங்கள் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது. கம்பம் வார சந்தை மட்டுமே எங்கள் காவல் எல்லைக்குட்பட்ட பகுதி என்றும், உழவர் சந்தை தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிரி கம்பம் மெட்டு காலனியில் குடியிருந்து வந்தார் என்ற விபரத்தை நான் எதன் அடிப்படையில் தெரிந்து கொண்டேன் என்றால் மைக் பேட்ரோல் மூலம் விசாரித்து தெரிந்து கொண்டோம்.

6. புகார் மனுவே எனக்கு நேரடியாக தெரியாது என்பதால் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு எனக்கு நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன் பகை காரணமாக இந்த வழக்கு காட்ட வேண்டும் என்பதற்காகவே இந்த புகார் மனுவானது வழக்குக்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் மனு ரசீது எண். 324/2024 படி தான் ரசீது வழங்கப்பட்டுள்ளது என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

7. ஆய்வாளர் விசாரணையில் மனு எண். 324/2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையான சிஎஸ்ஆர் ஆக இருக்கும் பட்சத்தில் அதன் எண் முறையாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் பகல் 11 மணிக்கு நான் காவல் நிலைய எல்லையில் இருந்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ரதிபிரியாவின் விலாசம் வார்டு 19, பாரதியார் நகர், கம்பம் என்று விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் மாரியம்மன் கோவில் தெருவில் அவர் குடியிருந்ததாக முகவரி சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும், உருவாக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. உண்மையிலேயே என் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜராகி இருந்தால் இது பற்றி விபரங்களை முறையாக விசாரணை செய்திருப்பேன் என்றால் சரியல்ல, நான் விசாரணை அதிகாரியாக இருந்திருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>4-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.18 16:15:44 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.